பெரிய தபாற் கந்தோரில் புதிதாக பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை.

மலர்: 7 | 1963, யூன் 19 ந் திகதி | இதழ்: 13

விஞ்ஞான மாணவர்களுக்கு

உபகாரச் சம்பளம்

விஞ்ஞானம் படிப்பதற்குத் தக்க வசதியற்ற பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களில் 791 பேருக்குக் கல்விப் பகுதி விஞ்ஞானம் பயில்வதற்கென உபகாரச் சம்பளம் வழங்கியுள்ளது. ஆய்கூட வசதிகளுடன் உள்ள அரசாங்க பாடசாலைகளிலும், கல்வி அதிபரின் முகாமையின்கீழ் உள்ள பாடசாலைகளிலும் அம்மாணவர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பகுதி திரட்டிய புள்ளி விபரத்தின்படி 242 அரசாங்க பாடசாலைகளிலும் கல்வி அதிபரின் முகாமைக்குள் வரும் பாடசாலைகளில் 131 பாடசாலைகளிலும் ஆய்கூட வசதிகள் உள்ளன. மற்றைய பாடசாலைகளில் சிலவற்றில் தரமான ஆய்கூடங்கள் இல்லாத போதிலும், விஞ்ஞானம் போதிப்பதற்கு அவை போதுமானவையாகவே உள்ளன.

சென்ற வருடம் விஞ்ஞான ஆசிரியர்களுக்குப் பத்து நாள் நினைவுறுத்தற் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இதில் சுமார் 130 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

சென்ற வருடத்தில் ஐந்து விஞ்ஞான பட்டதாரிகள் பாடசாலைப் பதிசோதகர்களாக நியமிக்கப்பட்டனர்.

தூதுவர் மாற்றங்கள்

மலேயாவில் உள்ள இலங்கை ஸ்தானீகராலயம் சிக்கனத்தை முன்னிட்டு ஜூன் முதலாம் திகதியிலிருந்து மூடப்படுகிறது.

இந்தோனேஷியாவில் உள்ள இலங்கை ஸ்தானீகர், மலேயாவிலும் இலங்கை ஹைகமிஷனராகக் கடமை பார்ப்பார்.

பிரிட்டனின் இலங்கையின் ஹைகமிஷனராக இருந்த திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன அடுத்த மாதத்தில் கனடாவுக்கு இலங்கையின் ஹைகமிஷனராக மாறிச் செல்வதுடன், ஐக்கிய நாடுகள் சபையிலும் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகக் கடமை புரிவார். தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் பிரதிநிதியாகக் கடமைபுரியும் டாக்டர் ஜி. பி. மலலசேகர பிரிட்டனுக்கு இலங்கையின் ஹைகமிஷனராகப் போகிறார்.

காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. டி. பி. டி சில்வா இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தெல்கொடை என்னுமிடத்தில் அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட இரண்டாவது தேயிலைத் தொழிற்சாலையைத் திறந்து வைக்கிறார்.

விசேட கடுகதி பஸ் வண்டிச் சேவை

யாழ்நகருக்கும் திருமலைக்குமிடையே இயங்குகிறது

இவ்வருடம் ஜூன் மாதம் 1 ந் திகதி முதல் யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்குமிடையே விசேட கடுகதி பஸ்வண்டிச் சேவையொன்று ஆரம்பமாகியுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் பஸ் வண்டி வவுனியா, கெபிட்டிகொலாவ, ஹொரவப்பொத்தானை ஆகிய நகரங்கள் வழியாக திருகோணமலை செல்லுகிறது.

அனுராதபுர வழியாக ஏற்கனவே பஸ் வண்டிச் சேவை யொன்று இயங்குகிறது. இப்புதிய கடுகதிச் சேவையானது மேலதிகமானதொரு சேவையாகும்.

இப்புதிய சேவையின் நேரசூசிகை வருமாறு :—

யாழ்ப்பாணம்—திருகோணமலை :

- யாழ்ப்பாணம் (புறப்படும் நேரம்) மு. ப. 5.30
- வவுனியா (புறப்படும் நேரம்) மு. ப. 9.45
- கெபிட்டிகொலாவ (புறப்படும்நேரம்) மு. ப. 10.45
- ஹொரவப்பொத்தானை (புறப்படும் நேரம்) மு.ப. 11.30
- திருகோணமலை (சேரும் நேரம்) பி. ப. 12.30

திருகோணமலை—யாழ்ப்பாணம் :

- திருகோணமலை (புறப்படும் நேரம்) மு. ப. 6.00
- ஹொரவப்பொத்தானை (புறப்படும் நேரம்) மு. ப. 7.00
- கெபிட்டிகொலாவ (புறப்படும்நேரம்) மு. ப. 7.45
- வவுனியா (புறப்படும் நேரம்) மு. ப. 8.55
- யாழ்ப்பாணம் (சேரும் நேரம்) பி. ப. 1.00

இப்பிரயாணத்துக்கான கட்டணம் 5 ரூபா 10 சதமாகும். அனுராதபுரம் வழியாகச் செல்லும் பிரயாணக் கட்டணத்தை விட இது 90 சதம் குறைவாகும்.

ஜூன் மாதம் 3 ந் திகதி தொடக்கம் 102 ஆம் மார்க்க இலக்க கொட்டாஞ்சேனை–கல்கிசை, கோட்டை–கல்கிசை பஸ் வண்டிகள் இரத்மலானையிலுள்ள செவிடர் குருடர் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள பஸ்வண்டி நிற்பாட்டப்படுமிடத்தில் கடைசியாக நிற்பாட்டப்படுகிறது.

இந்த அந்தத்திலிருந்தும் இந்த அந்தத்துக்கும் போக்குவரத்து அதிகமாகவுள்ள நேரங்களில் மணித்தியாலமொன

(3 ம் பக்கம் பார்க்க)



தெல்கொடை தேயிலைத் தொழிற்சாலையைப் படத்தில் காணலாம்.

உங்கள் ஒத்துழைப்பிருந்தால்

நாய் விசரை ஒழிக்கமுடியும்

மனிதனையும் மிருகத்தையும் பீடிக்கும் பயங்கர நோய்களிலொன்று நாய்விசர். பொதுவாக, இந்நோயை "ஹைட்ரோபோபியா" என்று அழைக்கப்படுவது முண்டு. இந்நோயினால் பீடிக்கப்படுபவர்களுக்கு ஏக்கமும் பயமும் அளவற்ற வேதனையும் உண்டாகின்றன. இந்நோய் ஏற்படாமல் கலபத்தில் தடை செய்யக்கூடியதாக இருப்பதால், இவ்வித பயங்கரத்துக்குள்ளாக வேண்டிய அவசியம் ஏற்படக் காரண மில்லை. நாய்விசர் பற்றியும் அதன் தடைமுறைகள், சிகிச்சை முதலியவை பற்றியும் விளக்கிக் கூறுகிறது இத்துண்டுப் பிரசுரம்.

பிரதானமாக நாய்களுக்கு உண்டாகும் நோய்களிலொன்று நாய்விசர். இந்நோய்க் கிருமிகளைக்கொண்ட விசர் நாய்கள் மனிதர்களையும் ஏனைய மிருகங்களையும் கடிப்பதன் மூலம் அ(வை)வர்களுக்கும் இந்நோயைத் தொற்றவைத்து விடுகின்றன. ஓநாய்கள், பூனைகள் மற்றும் மிருகங்களுக்கும் இந்நோய் தொற்றக் கூடும். இந்நோய், "வைரஸ்" என்றழைக்கப்படும் ஒரு நுண்ணிய கிருமியால் உண்டாகின்றது. விசேட வகையானதொரு பூதக்கண்ணாடியின் மூலமாகவே இக் கிருமிகளைப் பார்க்க முடியும். தொற்று ஏற்பட்டபின் இக் கிருமிகளை விருத்தி செய்துள்ள விசர் மிருகங்களே இந்நோயை ஏனையோருக்குத் தொற்ற வைக்கக்கூடும்.

தொற்று ஏற்பட்ட மிருகம் விசருற்ற நிலையிலும் நோய் அறிகுறிகள் தோன்றும் கடைசிக் கட்டத்திலும் அதன் உமிழ்நீரில் (எச்சில்) இந்நோய்க் கிருமிகள் காணப்படுகின்றன. வாயிலுள்ள உமிழ்நீரை ஒரு நாயானது தனது நகங்களிலும் பாதங்களிலும் பூசக்கூடும்பட்சத்தில், அது தன் நகங்களால் பிறிதொருவரைப் பிராண்டும் போது இந்நோய்த் தொற்று ஏற்படும் ஆபத்து உண்டாகின்றது. **சிதைவற்ற சருமத்தை ஊடுருவிச் செல்லும் ஆற்றல் இக்கிருமிகளுக்கு இல்லை.** இதனை விவரிப்பின், சருமத்தில் ஏற்படும் புதியதொரு காயத்தினூடாகவே இந்நோய்த் தொற்று ஏற்படுவது சாத்தியமாகும். ஒருவரின் சிதைவற்ற—காயமற்ற—சருமத்தை விசர்நாயொன்று நாவால் நக்கினாலும் இந்நோய்த் தொற்று ஏற்படாது. அன்றி ஒருவர் விசர்நாய் ஒன்றின் முதுகைத் தடவினாலும் தொட்டாலும் இந்நோய்த் தொற்று ஏற்படாது.

தொற்றுமியல்புள்ள உமிழ்நீர்

இந்நோயின் முதல் அறிகுறிகள் காணப்படுவதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரே உமிழ்நீரில் நோய்க்கிருமிகள் காணப்படுகின்றன. உமிழ்நீர் நோய்த்தொற்றுமியல்புள்ளதாகக் காணப்படுகின்றது. விசர்நாய் கடித்த காயத்தின் ஆழம், காயங்களின் எண்ணிக்கை, காயமேற்பட்ட இடங்கள் ஆகியன மிக முக்கியமானவையாகும். காரணம், நாய் கடித்த காயத்துக்கேற்ப—(காயம் எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு) – ஆபத்தும் அதிகரிக்கிறது. அத்துடன் காயங்களின் எண்ணிக்கையும் கூடக்கூட, அதிலும் காயங்கள் தலைக்கு அருகாமையில் இருப்பின் ஆபத்து மேலுமதிகரிக்கின்றது. உதாரணமாக, ஒரு விசர்நாய் ஒருவரின் காலிலோ கையிலோ கடிப்பதைக் காட்டிலும் அவரது முகத்தில் கடிப்பது அதிக ஆபத்தை விளைவிக்கின்றது. நேரடியற்ற முறையிலும் நோய்த் தொற்று ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. எனினும் இம்மாதிரியான தொற்று ஏற்படுவது மிகவும் அரிது.

பொதுவாக இரண்டு வகை நாய்விசர்

கீழ்க்காணும் அறிகுறிகளுடன் கூடிய மூர்க்கத்தனமான வகை ஒன்று :—

1. முதலில், நாயின் சொந்தக்காரர் அதன் போக்கில் சில மாறுதல்களைக் கவனிக்கக்கூடும். அவையாவன பயந்த தன்மை ; இருண்ட இடங்களை நாடுதல் ; சலபத்தில் கோபங்கொள்ளுதல் அத்துடன் காரணமின்றி அடிக்கடி சடுதியாக, வரண்ட குரலுடன் குரைத்தல்.

2. பிறகு, நாயின் உணவு விஷயத்தில் மாற்றங்கள் காணப்படும். மரத்துண்டு, வைக்கோல், சீரணிக்க முடியாத பொருட்கள் முதலியவற்றைத் தின்பதில் அதிக ஆர்வங் காட்டும். இக்கட்டத்தில் நாய் மூர்க்கத்தனமாகக் காணப்படுவதோடு எதிர்ப்படும் எதையும் கோபத்துடன் எக்காரணமுமின்றிக் கடித்துக்கொண்டோ, கடிக்கத் தெண்டித்துக்கொண்டோ இருக்கும்.

3. நோய்க் கிருமிகள் நிறைந்த உமிழ்நீர் வீணியாக வாயிலிருந்து வடிய, இவ்விசர்நாய் தெருக்களில் அலைந்து திரியும். சிலசமயங்களில் மைல் கணக்கில் நடந்து திரியும். அச்சமயம் எதிர்ப்படும் மிருகங்களையும் பொருட்களையும் கடித்தும் கௌவியும் இப்பயங்கரமான நோய்க்கிருமிகளைப் பரப்புகிறது.

4. இந்நோயின் கடைசிக் கட்டத்தில் தசைநார்கள் விறைத்து பாரிசவாத குணம் காணப்படும். அச்சமயம் நாயின் மூர்க்கத்தனம் சிறிது தணிந்து காணப்படுவதோடு நாய் தன் வாயை மூட முடியாமல் கஷ்டப்படும். காலக்கிரமத்தில் நாய்க்கு எழுந்து நற்க முடியாத நிலையேற்படும். அதைத் தொடர்ந்து மரணம் சம்பவிக்கும்.

"ஊமை நாய்விசர்" மற்றொரு வகை

பாரிசவாத குணத்துடன் கூடியது இந்த வகை. நாயின் வாய்க் கீழ்த்தாடை கீழிறங்கிவிடும். அதனால் இது எதையும் விழுங்க முடியாது. பின்னங்கால்கள் முடங்கிவிடும். மூன்று அல்லது நான்கு நாட்களில் நாய் இறந்து விடுகிறது.

இந்த வகையான நோயாற் பீடிக்கப்பட்ட நாயானது, இருண்ட, குளிர்ச்சியான இடத்தை நாடிச்சென்று அங்கு சதா படுத்துக்கிடக்கும். அது உணவைச் சாப்பிடுவதற்கும் நீரைக் குடிப்பதற்கும் முயற்சிக்கும். ஆனால் அதன் தொண்டையிலுள்ள தசைநார்கள் பாரிசவாதத்தின் காரணமாக விறைத்து விடுவதால், அது எதையும் சாப்பிடவோ, குடிக்கவோ முடியாமல் தவிக்கும். அதன் தொண்டையில் எலும்பொன்று சிக்கிக்கொண்டதோ வென ஐயமுறும் வகையில் நடந்துகொள்ளும் அந்நாய்.

தொற்று ஏற்படாதவாறு தடைசெய்யும் இலகுவான முறைகள்

நாய்விசர் பீடித்துள்ள மிருகங்களை அல்லது இந்நோயால் பீடிக்கப்பட்ட மிருகங்களால் தொற்று ஏற்பட்டுள்ளதெனச் சந்தேகப்படும் மிருகங்களை—அளைந்தவர்கள்—தொட்டவர்கள் உடனே தங்கள் கைகளுக்குச் சவர்க்காரம் போட்டு சுத்தமான நீரில் நன்றாகக் கழுவிக்கொள்ளுதல் வேண்டும். அல்லது கிருமிநாசினியால் கழுவிக்கொள்ளுதல் வேண்டும். அவ்வகையான மிருகங்கள் கடித்த காயங்களை, சவர்க்காரம் பூசி கிருமி நாசினியால் அல்லது ஓடும் நீரில் நன்றாகக் கழுவிக்கொண்ட பிறகு காயங்களுக்கு ஒரு குறிப்பிட்ட சிகிச்சையைச் செய்யவேண்டும். இச் சிகிச்சையை ஒரு ஆஸ்பத்திரியிலோ அன்றி ஒரு மருந்துச்சாலையிலோ பெற்றுக்கொள்ளுவது அவசியமாகும் ; சாலச்சிறந்ததாகும்.

விசர்நாயினது அல்லது விசர் என்று சந்தேகிக்கப்படும் நாயினது அல்லது பின்னர் கண்டுபிடிக்கமுடியாத விடுகாலி நாயினது உமிழ்நீர், அதுநக்குவதன் மூலம் நேரடியாகவோ அன்றி வேறு விதமாகவோ தங்கள் உடம்பில் பட்டுக்கொண்டவர்களும் இவற்றினொன்றினால் பிராண்டப்பட்டவர்களும் கடிக்கப்பட்டவர்களும், காலதாமதமின்றி, உடனடியாக அண்மையிலுள்ள உள்ளூர் ஆஸ்பத்திரிக்குச்சென்று வேண்டிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதோடு, அவசியமெனக் காணப்படின் தகுந்த சிகிச்சையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஆஸ்பத்திரிகளில் வேண்டிய போதனைகளும் தகுந்த சிகிச்சைகளும் எந்நேரத்திலும் அளிக்கப்படுகின்றன.

விசர்நோயினால் பீடித்த, கடித்த மிருகத்தின் மூளையைப் பரிசோதனை செய்து அதன் முடிவுகள் வரும் வரை சிகிச்சை பெறுவதில் காலதாமதம் செய்யக்கூடாது.

மிருகமொன்று நாய்விசரினால் பீடிக்கப்பட்டுள்ளதெனச் சந்தேகப்படும்பட்சத்து, அதனை ஒரு தனி இடத்தில் கட்டிவைத்துப் பத்து நாட்களுக்கு அவதானிக்க வேண்டும். இந்தப் பத்து நாட்களிலும் அது ஆரோக்கியமாகக் காணப்படின், கடிக்கப்பட்ட சமயத்தில் நோய்த்தொற்று ஏற்படவில்லையென்பதாகக் கருதி அதற்களிக்கும் சிகிச்சையை நிறுத்தலாம்.

இந்நாட்களில் அம்மிருகம் இறந்தால், பரிசோதனை செய்வதற்காக, அதனுடைய தலையைக் காலதாமதமின்றி வைத்திய ஆராய்ச்சித்தாபனத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். நாய்விசருக்காகப் பரிசோதனை செய்யப்படுதற்கு இறந்த மிருகத்தின் தேவையான அங்கங்களை எடுத்தனுப்புவதற்குப் பொலிசாரினதும் உள்ளூர் ஆஸ்பத்திரியிலுள்ள வைத்திய உத்தியோகத்தரினதும் உதவியை நாடுதல் வேண்டும்.

நாய்விசர் கட்டுப்பாடு

நாய்விசரைக் கட்டுப்படுத்துவதற்குப் பின்வரும் நடைமுறைகளைக் கையாள வேண்டியது அவசியமாகும் :—

1. நாய்களுக்குக் காலாகாலத்தில் நாய்விசர்த்தடை ஊசிமருந்தை கட்டாயமாக ஏற்றுவித்துக் கொள்ளுதல் வேண்டும்.

2. சகல நாய்களுக்கும் உத்தரவுப் பத்திரம் (லைசென்ஸ்) பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. விடுகாலி நாய்களனைத்தையும் அழித்து (கொன்று) விடுதல் வேண்டும்.

4. நாய்விசரினால் பீடிக்கப்பட்ட மிருகமொன்றினால் கடிக்கப்பட்ட சகல நாய்களையும் பூனைகளையும் கொன்று விடுதல் வேண்டும். இம்மிருகங்களை வளர்ப்போர் இவற்றைக் கொல்ல விரும்பாவிட்டால் அவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமெனச் சிபார்சு செய்யப்படுகின்றது :—

(அ) அம்மிருகத்தை ஆறு மாதங்களுக்கு ஒரு கூண்டில் தனியாக அடைத்து வைத்திருக்க வேண்டும்.

(ஆ) 12 மாதங்களுக்கிடையில் அம்மிருகத்துக்கு தடை ஊசி மருந்து ஏற்றப்படாதிருந்தால் உடன் அதற்குத் தடை ஊசி மருந்து ஏற்றி, மூன்று மாதங்களுக்கு ஒரு கூண்டில் தனியாக அடைத்து வைத்திருக்க வேண்டும்.

(இ) 12 மாதங்களுக்கிடையில் அதற்கு ஊசிமருந்து ஏற்றப்பட்டிருந்தால் அதற்கு மறுபடியும் ஊசிமருந்து ஏற்றி, அதனை நாய்வாரில், பாதுகாப்பாகக் கட்டி 30 நாட்களுக்கு, தனிமையான ஒரு இடத்தில் கட்டி வைத்திருக்க வேண்டும்.

உணவு (இறைச்சி)க்காக ஒதுக்கப்பட்டுள்ள மிருகங்களை நாய்விசரால் பீடிக்கப்பட்டுள்ள மிருகமொன்று கடித்து விட்டால், கடிக்கப்பட்ட ஒரு வாரத்துக்குள் அம்மிருகங்களைக் கொன்று இறைச்சியை உபயோகிக்க வேண்டும். அல்லது கடிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு அவை ஆரோக்கியமாகக் காணப்படின், அவற்றைக் கொல்லலாம்.

ஆறு மாதங்களுக்குப் பின்னர் கொல்லப்படும் மிருகங்களை அந்த ஆறு மாதங்களுக்கும் வைத்துப் பராமரிப்பது ஆபத்தானது. காரணம், இக்காலத்தில் அவற்றிற்கு இந்நோய் தோன்றினால் அது மற்றவர்களுக்கும் (பராமரிப்பவர்கள்) தொற்றிவிடக்கூடும்.

கடைசியாக ஒரு வார்த்தை—

இந்நாடு பூராகவும் நாய்விசரை ஒழிப்பதற்கான ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறது இப்பகுதி. இத்துண்டுப்பிரசுரத்தில் உள்ளவற்றை வாசித்தறிந்த உங்களுக்கு நாய்விசரை ஒழிக்கும் போரில் தாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய பங்கை இந்நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் உணர்வார்களேயாயின், "நாய்விசர் இன்று ஒரு பிரச்னையாக எழாது" என்பது புலனாகும். இப்பிரசுரத்தில் காணப்படும் நடைமுறைகளை நீங்கள் பின்பற்றி நடப்பதன்மூலம் நாய்விசரை இந்நாட்டிலிருந்து ஒழிப்பதற்கு உதவி புரிகிறீர்கள். இதனால் உங்களையும் உங்கள் குடும்பத்தவரையும் இப்பயங்கர நோயிலிருந்து காப்பாற்றுகிறீர்கள்.

புற்று நோய்

(சென்ற வாரத் தொடர்)

இதனைக் கண்டுபிடிப்பதெங்ஙனம் ?

12. புற்றுநோயின் சில ஆரம்ப அறிகுறிகள் யாவை ?

சாதாரண அறிகுறிகள் எழு உள. இவை, வழக்கமாக, புற்றுநோயின் எழு அபாய அறிவிப்புகள் எனப்படும். அவையாவன :—

1. ஆறாத புண் எதுவும்.
2. மூலையில் அல்லது வேறெங்காகி லுமுள்ள ஒரு கட்டி அல்லது தடிப்பு.
3. அசாதாரணமான இரத்த ஒழுக்கு அல்லது சீழ் வடிதல்.
4. காயில் அல்லது மச்சத்தில் ஏதாவது மாற்றம்.
5. இடையறாத அசீரணம் அல்லது விழுங்குவதில் சிரமம்.
6. இடையறாத கம்மல் அல்லது இருமல்.
7. வழமையான மலங்கழியும் பழக்கத்தில் ஏதாவது மாற்றம்.

இந்த அறிகுறிகளில் ஏதாவதொன்றேனும் காணப்பட்டால் உடனே நீங்கள் ஒரு வைத்தியரிடம் சொல்ல வேண்டும். இந்தப் பட்டியலை மனனம் செய்து கொள்ளுங்கள்.

13. வலி (நோவு) யானது புற்று நோயின் ஆரம்ப அறிகுறியா ?

இல்லை. எலும்பு அல்லது நரம்பு இழையத்தில் உண்டாகும். புற்றுநோயைத் தவிர ஏனைய இடங்களில் உண்டாகும் புற்றுநோய்க்கு, வலியானது ஆரம்ப அறிகுறியல்ல. வலியானது, வழக்கமாக, கடைசி அறிகுறியாகும். நோய் முற்றிய பின்னரே, அனேகமாக வலி ஏற்படும்

14. எதற்காக, புற்றுநோயைத் தொடக்கத்திலேயே கண்டு பிடித்துச் சிகிச்சையளிக்க வேண்டும் ?

எவ்வளவு கெதியாக இது கண்டு பிடிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு, குணப்படுத்தமுடியாத, உடம்பின் பல்வேறு பாகங்களுக்கு இந்நோய் பரவாது தடுப்பது சுலபமாகும்.

இதற்கு எவ்வாறு சிகிச்சையளிப்பது ?

15. புற்றுநோய்க்கு எவ்வாறு சிகிச்சையளிக்க வேண்டும் ?

சத்திர சிகிச்சை மூலம் அல்லது எக்ஸ் கதிர் மூலம் அல்லது இரேடியம் மூலம் அல்லது இவை மூன்றும் கலந்து, சாத்தியமானவரையில் இந்நோயின் ஆரம்ப கட்டத்திலேயே சிகிச்சையளிக்க வேண்டும்.

16. தனக்குப் புற்றுநோய் இருக்கலாமென்றெண்ணும் ஒருவர் என்ன செய்ய வேண்டும் ?

உடல் முழுவதையும் நன்கு பரிசோதித்துப் பார்ப்பதற்காக அவர் ஒரு வைத்தியரிடம் செல்லவேண்டும்.

17. புற்றுநோயைக் குணப்படுத்துவதற்குத் தைலங்களை அல்லது மருந்துகளை நம்பியிருப்பது நல்லதா ?

இல்லை. ஆழமாக இடம்பெற்றிருக்கும் புற்றுநோய் அணுக்களை அழிப்பதற்கு, எந்தப் பூச்சு மருந்தோ அல்லது எந்தத் தைலமோ இழையங்களை ஊடுருவிச் செல்லாது. அத்துடன் பிரயோகிக்கப்பட்ட இடத்திலிள்ள சாதாரண உயிரணுக்களுக்குப் பங்கம் ஏற்படாவண்ணம் புற்றுநோய் அணுக்களை மட்டும் அழிக்கும் சக்தி எந்த மருந்துக்கும் கிடையாது.

புற்று நோயும் நீங்களும்

18. இலங்கையில், வாய்க்குள், சாதாரணமாக புற்று நோய் உண்டாகும் இடங்கள் யாவை ?

கன்னமும் நாக்கும் பொதுவாக 60% கன்னத்திலேயே உண்டாகின்றது.

19. பெற்றோரிலொருவர் புற்றுநோயினால் இறந்தால் அவர்களின் பிள்ளைகளுக்கு இந்நோய் உண்டாவதற்குச் சாத்தியக் கூறுகள் உண்டா ?

பொதுவாக இல்லை. புற்றுநோயாற் பீடிக்கப்பட்ட பெற்றோர்கள் உள்ள அனேக குடும்பங்களில், அவர்களுடைய பிள்ளைகளுக்கு இந்நோய் உண்டாகவில்லை. ஆனால் புற்றுநோயைக் கண்டேயிராத குடும்பத்திலுள்ள ஒருவருக்கு இந்நோய்வரவும் கூடும்.

20. போலி வைத்தியங்கள் ஏன் ஆபத்தானவை ?

ஏனையவற்றோடு பின்வரும் காரணங்களுக்காக :—

1. ஒரு சில போலி வைத்தியர்கள் வைத்திய சாத்திர ரீதியில் பயிற்றப்பட்டவர்கள். எனவே அவர்களுக்குப் புற்றுநோய் பற்றிய மூலாதார ஞானம் கிடையாது.
2. அவர்கள், சரியான சிகிச்சை பெறுவதற்கு நோயாளி பயன்படுத்த வேண்டிய பொன்னான நேரத்தை வீணாக்கச் செய்கின்றார்கள்.
3. போலி வைத்தியர்களால் உபயோகிக்கப்படும் பூச்சு மருந்துகளும் மருந்து வகைகளும் புற்றுநோயைக் குணப்படுத்தும் சக்தியற்றவை.
4. போலி வைத்தியர்கள் தங்கள் போலி நடிப்பின் மூலம் நோயாளியிடமிருந்து பணத்தைப் பறித்து அந்த நோயாளி வேறு இடத்தில் சிறந்த சிகிச்சை பெறவிடாது தடுக்கின்றார்கள்.

அரசாங்கத் தொழிற் பகுதி

முற்றெடர்

தொழிற் சுகாதாரப் பிரிவு

தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர் தமது 24 மணி நேர நாளில் ஏறக்குறைய ⅓ பகுதியைத் தமது வேலைத்தலத்திற் செலவிடுகிறார்கள். எனவே, தொழிலாளரின் சுகாதாரம், நல்வாழ்வு, உற்பத்தி ஆகியன வேலைத் தலத்தின் சூழ்நிலையால் எவ்வண்ணம் பாதிக்கப்படுகின்றனவென்பதைக் கருத்திற் கொண்டு குறித்த சூழ்நிலையை ஆராய்வதவசியமாகும். ஒவ்வொரு தொழிலாளரும் செய்யும் வேலைக்கும் அவர் ஈடுபடும் தொழிலுக்கும் ஏற்ப, சூழ்நிலையின் தன்மையும் சிக்கலும் மாறுவது இயல்பே, வழக்கமாகச் சூழ்நிலையை எவ்வண்ணம் நோக்குகிறோமெனின், அதிலுள்ள புகைகள், தூசிகள், வாயுக்கள், நீர்த்தூவல்கள் கரைப்பான்கள், சத்தம், கதிர்வீசல் ஆகியவற்றையும், மற்றும் பௌதிக, இரசாயன ஆக்கிகளையும் கருத்திற்கொண்டே நோக்குகிறோம். தனிப்பட்டவர்களென்ற முறையில் பாதுகாப்பும் சுகாதாரமும் பொருந்திய வேலைச் சூழ்நிலைக்கு உதவக்கூடிய அல்லது தமக்கும் தம்முடன் வேலை செய்வோருக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஆட்களும் இத்தகைய சூழ்நிலையின் ஒரு பகுதியாவர்.

தொழிலபிவிருத்தி பெரிதும் முன்னேறியுள்ள சமீப காலங்களில், ஊழியரின் வேலை நிலைமைகளைச் சீர்திருத்துவதனூற் பொருளாதாரச் சகாயங்களையடையலாமென்பதை நிருவாகத்தினர் உணர்ந்துள்ளனர். ஆயினும், வேலை நிலைமைகளைச் சீர்திருத்துவதற்கு மூன்று தரப்பினரின் ஒத்துழைப்பு வேண்டும். (i) பாதுகாப்பு, சுகாதாரம், நல்வாழ்வு ஆகியவற்றிற்கு அவசியமான கீழெல்லைத் தேவைகளை நடைமுறைக்குக் கொண்டு வரும் அரசாங்க நடவடிக்கை. (ii) தொழிலாளரின் சங்கங்களுக்கும் தனிப்பட்ட தொழிலாளருக்குமிடையே ஒத்துழைப்பு. (iii) நிருவாகத்தினரின் ஒத்துழைப்பும் ஆதரவும்.

வேலை நிலைமைகள் பாதகமாக இருப்பின், அவை தொழிலாளரின் உடல் நலத்தையும் உளநலத்தையும் கெடுப்பதோடு, வேலைத் திறனைக் குறைக்கவும், நேரடியாகவோ மற்றும் வகையிலோ விபத்துக்களையும் உண்டு பண்ணவும் எதுவாகும்.

வேலைச்சூழ்நிலையில் தொழிற்சுகாதாரத்தைப் பாதிக்கும் அம்சங்கள் பொதுவாக எளிதில் உணரப்படுவதில்லை. இதன் காரணம், அவற்றின் விளைவுகள் உடனடியாக உணரக் கூடியனவல்லவென்பதே. நாட்பட்டபின் அவை மோசமாகக் கூடியன. இதன் விளைவாக, தொழிற் காரணங்களால் ஏற்படும்நோய்கள் அடிக்கடி கண்டுபிடிக்கப்படாதிருப்பதுண்டு. விடப்பொருள்கள் அல்லது பௌதிக ஆக்கிகள் ஊட்டப்படுவதனால் ஏற்படும் சிலவகைத் தொழில் நோய்கள் பல ஆண்டுகள்வரை வெளிப்படையாகக் காணப்படுவதில்லை. நோய்க்காளானவர் வேலையிலிருந்து விலகி அதிக காலத்தின் பின்னர் முற்றிலும் வலியிழந்தவராக இருக்க நேரிடும்.

சுகாதாரத்தைப் பயன்படுத்தக்கவகையிற் பாதுகாத்தற்கு மூன்று தொகுதி நடவடிக்கைகள் அத்தியாவசியமாகும். அவையாவன : (1) சுகாதாரத்திற்கு ஆபத்தை யுண்டு பண்ணக்கூடிய எதுக்களுண்டா என்பதைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு வேலைச் சூழ்நிலை இடையறாது பரிசோதிக்கப்படவேண்டும். (2) காலத்திற்குக் காலம் வைத்தியப் பரிசோதனைமூலம் தமது சுகாதாரம்பற்றியும் தம்முடன் வேலை பார்க்கும் தொழிலாளரின் சுகாதாரம் பற்றியும் தொழிலாளருக்கு உறுதியளிக்கப்படவேண்டும். (3) தொழில் புரிகையில் ஏற்படும் காயத்திற்கு அல்லது நோய்க்குப் பரிகாரமளித்தற்குப் போதிய அவசர வைத்தியசேவையொன்று ஒழுங்கு செய்யப்படவேண்டும். தொழிலாளர் விடயத்தில் பின் வரும் சந்தர்ப்பங்களில் வைத்தியப்பரிசோதனை நடத்த ஒழுங்கு செய்வது அத்தியாவசியமாகும் : (அ) வேலையிற் சேர்வதற்கு நேரடுத்து முன்னர் ; (ஆ) நோய் அல்லது காயம் காரணமாக வேலைக்கு வராதிருந்து திரும்புகையில் ; (இ) வேலையின் தன்மைக்கேற்ப இடையிடையே.

உடல் நலமுற்ற தொழிலாளருக்குக் காயமேற்படுவதைத் தடுப்பதைவிட, பெரும்பாலும் நோயுற்ற தொழிலாளருக்கு சிகிச்சையளிப்பதிலேயே தொழில் வைத்தியரின் கவனம் பல ஆண்டுகளாகச் செலுத்தப்பட்டு வந்தது. துரதிர்ஷ்டவசமாக பெரும்பான்மையான தாபனங்களில் முதலாளிகள் ஒழுங்கு செய்துள்ள வைத்திய சேவைகள் இவ்வழக்கத்தையே இப்பொழுதும் கையாண்டு வருவதாகத் தெரிகிறது. தொழிற்சாலை வைத்தியர்களின் கடமை, தாபனத்தில் ஏற்பட எதுவான ஆபத்துக்களைக் கண்டு பிடித்தலும், மதிப்பிடலும், தொழிலாளருக்குக் காயமேற்படுவதைத் தடுத்தற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி முதலாளிக்கு ஆலோசனை கூறுதலுமாகும்.

அவசிய மேற்படுமிடத்து, தொழிற் சுகாதாரப் பிரிவு சுகாதார ஆபத்துக்கள் பற்றி விசேட ஆய்வுகளை நடத்திவருகிறது. இவ்வாய்வு, இரத்தச்சோதனை, சிறு நீர்ச்சோதனை, ஈய அல்லது விட இரசாயன ஆக்கிகள் எந்த அளவுக்கு இருக்கின்றன வென்பதை மதிப்பிடல் ஆகியவற்றை உட்படுத்தியுள்ளதாகும். 1961–62 ம் ஆண்டில் 15 அரசாங்க, வர்த்தகத் தாபனங்களிலுள்ள 356 தொழிலாளரை இப்பிரிவு பரிசோதனை செய்தது.

கூட்டுறவுச் சங்கங்களும் கொந்தராத்துகளும்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினாலும், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களினாலும் சென்ற வருடத்திலும், இவ்வருட முற்பகுதியிலும் பலதரப்பட்ட கொந்தராத்து வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பாலங்கள் திருத்தல், பாதை நிர்மாணிப்பு, பாடசாலைக் கட்டடங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்களும், குளக்கட்டுகளும் அரிசி ஆலைகள், ஆஸ்பத்திரிகள், உணவுப் பண்டசாலைகள் முதலானவை அமைத்தல் இத்தகைய வேலைகளுள் சில.

தலைமன்னாரில் நானு லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவிருக்கும் தடுப்பு முகாம் வேலையும் அங்குள்ள தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கே வழங்கப்பட்டுள்ளது.

பண்டசாலைகளுக்கும் துறைமுகங்களுக்கும் பொருட்கள் கொண்டு சேர்த்தல், பாடசாலைக்கு "பணிஸ்" வழங்குதல், ஆஸ்பத்திரிக்கு பாண், பால் முதலியன வழங்குதல், களனி ஆற்றில் வெள்ளத் தடுப்புக் கதவுகள் அமைத்தல், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உப்பு பதப்படுத்தி வழங்குதல், உள்ளூர் ஆட்சிச் சபைகளுக்கென கிணறு வெட்டுதல், பொலிஸ், மதுவரி, புகையிரதப் பகுதிகளுக்கு வேண்டிய உத்தியோக அங்கிகளைத் தைத்துக் கொடுத்தல், சாராயம் வடிப்பதற்கு வேண்டிய கள்ளு வழங்குதல் முதலியன மேற்கொள்ளப்படும் கொந்தராத்துக்களில் சிலவாகும்.

விசேட. . . . (1ம் பக்கத்தொடர்)

றுக்குப் பத்துத் தடவைகளும், போக்குவரத்து குறைவாகவுள்ள நேரங்களில் மணித்தியாலமொன்றுக்கு எட்டுத் தடவைகளும் பஸ் வண்டிகள் ஓடுகின்றன. இதைத் தவிர தெஹிவளைச் சந்தி, அலன் அவெனியு, விஹாரை ஒழுங்கை ஆகியவற்றிலிருந்தும் கோட்டைக்கு பஸ் வண்டிகள் புறப்பட்டுச் செல்கின்றன.

இரவு 9.45 க்குப் பின் இரத்மலானையிலிருந்து கோட்டைக்குச் செல்லும் பஸ் வண்டிகள் 3.6.63 க்குப் பின் புறக்கோட்டை வரை செல்கின்றன. மீள வாய்ந்த நேரசூசிகையின்படி காலை 7.13 மணிக்கு இரத்மலானையிலிருந்து கண் ஆஸ்பத்திரிச் சந்திக்கும் பிற்பகல் 3.08 மணிக்கு கண் ஆஸ்பத்திரிச் சந்தியிலிருந்து மொரட்டுவைக்கும் பாடசாலை பஸ் வண்டி யொன்று ஓடுகிறது. இதில் மாணவிகள் மட்டுமே ஏற்றப்படுகிறார்கள். இந்தப் பஸ் வண்டி புள்ளேர்ஸ் வீதி, தர்ஸ்டன் வீதி, அலெக்சாந்திரா பிளேஸ் வழியாகச் செல்கிறது. குறிப்பிட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்காக இப்போது இயங்கும் பஸ் வண்டிச் சேவை தொடர்ந்திருக்கும்.

இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்

22. 6. 63 தொடக்கம் 25. 6. 63 வரை

சனி

ஜூன் 22

காலை

6-45 உதய கீதம்‡
6-50 சைவ நற்சிந்தனை† குல. சபாநாதன்
6-55 கத்தோலிக்க நற்சிந்தனை—வண. பிதா. டீ. ஜெ. சின்னப்பு
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 மூவர் இசை
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி**—பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 இளைஞர் மன்றம்
5-45 திரை இசை
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை**—சனசமூக நிலைய நிகழ்ச்சி
6-45 வயலின்—ருத்ராணி நல்லைநாதன்
7-15 **கண்டதும் கேட்டதும்**—செய்திச்சுருள்
7-30 நேயர் விருப்பம்†
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—மலாய்ப் பேச்சு (மறு ஒலிபரப்பு)
8-15 பேச்சு—கவிதைக் கலையில் முஸ்லிம்கள் யூ. எல். தாவூத்
8-30 பாட்டு—ஓ. ஷரீப்
8-45 ஹிந்துஸ்தானி சங்கீதம்†
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 பேச்சு—திவ்வியப் பிரபந்தம்—(2) அ. செ. சுந்தரராசன்
9-30 பாட்டு— வி. சுந்தரம்
10-30 ஒலிபரப்பு முடிவு

* * *

ஞாயிறு

ஜூன் 23

காலை

6-45 பாமாலை‡
6-55 கத்தோலிக்க நற்சிந்தனை—வண. பிதா. டீ. ஜெ. சின்னப்பு
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தேர்ந்த இசை
7-45 திரை இசை
8-15 தமிழ் மூலம் சிங்களம் என். டி. பீரிஸ்
8-30 **ஞானஞ்சலி**—(மறு ஒலிபரப்பு)
9-00 இஸ்லாமிய சமயப்பாடசாலை—நடத்துபவர் மவுலவி ஏ. அப்துர் றஹ்மான்
9-30 **கத்தோலிக்க நிகழ்ச்சி**—
10-00 ஒலிபரப்பு முடிவு

பகல்

11-30 சிறுவர் மலர்—தயாரிப்பு : வானொலி மாமா
12-15 நேயர் விருப்பம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 **மாதர் பகுதி**— 1. விபத்துக்களும் முதலுதவியும் —பேச்சு—டாக்டர் பத்மா முத்துஸ்வாமி 2. சிறுகதை நாடகம்
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி**—பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 பாட்டு‡
5-45 திரைக்குரல்†
6-00 செய்திகள்
6-10 குரல்வகை
6-30 தாளவாத்யக் கச்சேரி எம். என். செல்லத்துரை—மிருதங்கம் ; வி. கணபதியா பிள்ளை—சஞ்சிரா ; என். ஆறுமுகம் பிள்ளை—கடம்
7-15 மாதர் கேட்டவை†
7-30 பாட்டு—என். செல்லமுத்து
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—மணிமொழிகள் ஆர். என். ஸைபுதீன் லாஹிப்
8-15 மாணவர் மன்றம்—தெமட்டகொடை மத்றஸதுல் கைரிய்யா பெண்கள் பாடசாலை
8-30 நேயர் கேட்டவை †
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள் "**வசதிக்கு வெள்ளைக் காரன்**" —ஆர். பாலகிருஷ்ணன் எழுதியது
9-45 நிலைய ஒலிப்பதிவுகள்
10-30 ஒலிபரப்பு முடிவு

* * *

திங்கள்

ஜூன் 24

காலை

6-45 **பாமாலை**—
6-55 கத்தோலிக்க நற்சிந்தனை† வண. பிதா. டீ. ஜெ. சின்னப்பு
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 மூவர் இசை†
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி**—பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 நிலைய ஒலிப்பதிவுகள் †
5-45 திரை இசை†
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை**—" தேச வளம் "
6-45 வயலின்—
7-00 நேயர் விருப்பம்†
7-30 வீணை—ராஜேஸ்வரி சோமசுந்தரம்
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—உறுதுப் பாடல்கள்†
8-30 செய்தித் தொகுப்பு
8-45 பாட்டு—எஸ். ஏ. லத்தீப்பாய்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 தமிழ்மூலம் சிங்களம் (மறு ஒலிபரப்பு)
9-30 இசைய்முதம்
9-45 பாட்டு—கே. மஹாலிங்கம்
10-30 ஒலிபரப்பு முடிவு

* * *

செவ்வாய்

ஜூன் 25

காலை

6-15 உதய கீதம்‡
6-50 சைவ நற்சிந்தனை‡ மீனாட்சி பொன்னுத்துரை
6-55 இஸ்லாமிய நற்சிந்தனை—எம். பீ. எம். மாஹிர்.

† இசைத்தட்டு

7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தேர்ந்த இசை
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி** பிறந்ததின வாழ்த்துக்கள்
5-45 திரை இசை
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை**—உணவுப் பொருக்கம்
6-45 புல்லாங்குழல்
7-00 நேயர் விருப்பம்
7-30 " **இருபது கேள்விகள்** " 26 வது நிகழ்ச்சி தயாரித்து நடத்துபவர் : " சானா "
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—(நேயர் கேட்டவை)‡
8-30 பேச்சு—" இஹ்யா உலூமுத்தீன் "–3 மவுலவி ஏ. அப்துர் றஹ்மான்
8-45 பாட்டு—எ. எம். நூர்தீன்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 கலை எடு ரஸமஞ்சரி பரத நாட்டிய இசை கவிதைச் சித்திரம் தொகுத்துக் தயாரிப்பவர் சி. வி. இராஜசுந்தரம்
9-45 நாகசுரம்—எஸ். என். அப்புலிங்கம் பிள்ளை
10-30 ஒலிபரப்பு முடிவு.

‡ நிலைய ஒலிப்பதிவு

பரீட்சைப் பகுதி—இலங்கை

அரசினர் பாடசாலைகளினதும் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளினதும் தலைமை ஆசிரியர்களுக்கு.

பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கு அடையாளப் பத்திரங்கள்

இலங்கை க.பொ. த. ப. (சாதாரண)ப் பரீட்சை/இலங்கை உயர்தர பாடசாலைத் தராதரப் பரீட்சை (பரீட்சைப் பகுதிக்குரிய பாடங்கள்)/இலங்கை க. பொ. த. ப. (உயர்தர)ப் பரீட்சை.

1. **1963 ம் ஆண்டு** டிசெம்பர் மாதத்திலிருந்து நடைபெறும் மேற்கூறிய பரீட்சைகளுக்கு பாடசாலைகளினால் அனுப்பப்படும் பரீட்சார்த்திகள் எல்லாரும் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும் தாம் இன்னாரென்பதை பரீட்சை மண்டபத்தில் நிரூபிக்கும்படி கேட்கப்படுவர்.

2. இதற்காகப் பின்வருவனவற்றுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) தலைமைத் தபால் அதிபதி (போஸ்மாஸ்டர் ஜெனரல்)யிடமிருந்து பெற்ற செல்லுபடியான அடையாளச் சீட்டு.

(ஆ) பரீட்சை ஆரம்பமாவதற்கு மூன்று வருடங்களுக்கு முந்தாத காலத்துக் கிடையில் பெற்ற குடியகல்வு குடிவரவுப் பகுதியால் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது தற்காலிக சான்றிதழ்ப் பத்திரம்.

(இ) பரீட்சை ஆரம்பமாவதற்கு மூன்று வருடங்களுக்கு முந்தாத காலத்துக் கிடையில் ஓர் அரசாங்கப் பகுதி, அதிகாரத்தின்கீழ் வழங்கப்பட்டதும் பரீட்சார்த்தியின் நிழற்படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு தராதரப் பத்திரம், உத்தரவுப்பத்திரம் அல்லது வேறு பத்திரம்

(ஈ) கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்), அளவுள்ள படம் ; அதன் பின்பக்கத்தில் கீழ்க்காட்டப்படும் விபரங்கள் இருத்தல் வேண்டும்:—

(i) பரீட்சார்த்தியின் கையொப்பம்,

(ii) பரீட்சார்த்தியின் முழுப் பெயர்,

(iii) பாடசாலையின் பெயரும் அதன் விசாலமும்,

(iv) பாடசாலைத் தலைமையாசிரியரின் பெயர்,

(v) தலைமையாசிரியரின் கையொப்பம்,

(vi) திகதி.

குறிப்பு.—மேற்குறிப்பிட்ட விபரங்களை அதிபர்/தலைமை ஆசிரியரே உறுதிப்படுத்தல் வேண்டும். பதிலாக வேறு ஆசிரியர் **உறுதிப்படுத்தக்கூடாது.**

(ii) பரீட்சை மண்டபத்திலுள்ள மேற்பார்வையாளர் உறுதிப்படுத்தப்பட்ட அப்புகைப்படத்தை **தன்வசம்** வைத்துக் கொள்வார்.

3. பாடசாலைப் பரீட்சார்த்தி மேற்கூறப்பட்டவற்றுள் ஓர் அடையாளச் சீட்டைக் கொண்டுவரத் தவறின் பரீட்சார்த்தியின் பரீட்சைத் தகைமை தற்காலிகமானதாகக் கொள்ளப்படும். அத்தகைமை பரீட்சாதிகாரியின் விரகின்படி நீக்கப்படலாம்.

4. க. பொ. த. ப. (சாதாரண)ப் பரீட்சை, உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கும் இவ் விபரங்களைத் தெரியப்படுத்தவும்.

ஆசிரியர்—ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சை—1963

மேற்படி பரீட்சை 1963 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ம், 7 ம் திகதிகளில் நடைபெறும். விண்ணப்பங்கள் 1963 ம் ஆண்டு ஜூலை 2 ம் திகதிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. **தகுதி** :— அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பயிற்றப்பட்ட முதலாம் வகுப்பு ஆசிரியர் அல்லது பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியராக இருப்பதுடன் வித்தியா பகுதியால் அல்லது அதன் அங்கீகாரம் பெற்ற ஒரு தாபனத்தால் நடாத்தப்பட்ட ஒரு தொழில் வழிகாட்டற் பயிற்சியில் பூரண பயிற்சி பெற்று அதனைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்தவராயிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பப் பத்திரங்களையும் பிரமாணங்களையும் பரீட்சைப் பகுதி, மலே வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்தில் இருந்து நேரில் அல்லது தபால் மூலமாக 1963 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ம் திகதிக்கும் 1963 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் திகதிக்குமிடையில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப் பத்திரத்துக்கு விண்ணப்பிப்போர் தமது விலாசம் எழுதப்பட்டதும் முத்திரை ஒட்டப்படாததுமான நீண்ட தபால் உறைகளை 1963 ம் ஆண்டு ஜூன் மாதம் 28 ம் திகதிக்கு முன்பதாக இப்பகுதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபால் உறையில் " S 14 " எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 10308—5,008 (6/63)